SOFA-I-M

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - நான்கு - __________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: ________________ | மாணவன்/மாணவி பெயர்: ________________ |
| இடம்: ________________ | வரிசை எண்: ________________ |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 5 × 1 = 5

1. 'நேர்த்தி' - இச்சொல்லுக்குரிய பொருள் ________________
   அ) தோற்றம் ஆ) பார்வை இ) சரியான அமைப்பு
2. பரம்பரை இச்சொல் குறிக்கும் பொருள் ________________
   அ) தலைமுறை ஆ) உறவுமுறை இ) உறவினர்
3. புத்திக் கூர்மையாக செயல்பட்டது யார்?
   அ) சிங்கம் ஆ) முயல் இ) பென்குயின்
4. சோளக் கொல்லைப் பொம்மை என்பது ________________
   அ) உயிருள்ள பொருள் ஆ) உயிரற்ற பொருள் இ) இயற்கையானது
5. 'காவல்காரர்' பாடலை எழுதியவர் ________________
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) அழ. வள்ளியப்பா

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

1. "என் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள். உங்களை கரையில் விடுகிறேன்" - என்று கூறியது ________________
2. 'நன்னெறி' பாடலின் ஆசிரியர் ________________
3. வியாபாரி, வணிகர் இருவரின் வழக்கை எதிர் கொண்டவர் ________________
4. 'ஆர்கானிக்' என்பது ________________ குறிக்கும்.
5. 'நெஞ்சு விடு தூது' என்ற நூலை எழுதியவர் ________________

**II. அ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** 3 × 1 = 3

1. பார்த்ததங்கே 2. இன்சொல் 3. விருந்துண்டு

**ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** 3 × 1 = 3

1. இயற்கை + உரம் 2. இன்னும் + ஒரு 3. நினைத்து + இருந்தேன்

**இ) எதிர்ச்சொல் எழுதுக.** 3 × 1 = 3

1. கீழே 2. இன்பம் 3. ஒற்றுமை

**ஈ) பொருத்துக.** 1 × 4 = 4

1. அழ. வள்ளியப்பா - வாழ்த்துதல்
2. தண்ணென் கதிர் - இயற்கை உரம்
3. வாழ்க வளமுடன் - நிலவின் ஒளி
4. இயற்கைத் தீவு - அம்மாவும் அத்தையும்

III. **அ) பின்வரும் மனப்பாடப் பாடலை அடி மாறாமல் எழுதுக.** 1 × 4 = 4

1. ‘இன்சொலால்’ எனத் தொடங்கும் ‘நன்னெறி’ பாடலைப் பிழையின்றி எழுதுக.

**ஆ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுக.** 6 × 2 = 12

1. காகம் கொடுத்த ஆடைகளைக் காவல்காரர் ஏன் அணியவில்லை?
2. பாட்டி வைத்தியம் என்றால் என்ன?
3. கதிரேசன் யானையை எதற்காக இரவல் கேட்டார்?
4. கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும்?
5. பனிமலைக்கு எதற்காக விலங்குகள் சென்றன?
6. செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைக் கூறுக.
7. ராஜாவைப் போல் சோளக்கொல்லையின் நடுவே நின்றவர் யார்?

IV. **அ) பின்வரும் வினாவிற்கு விடையளி.** 1 × 5 = 5

1. ‘உழவுக்கு வந்தனை செய்வோம்’ என்ற தலைப்பில் ஐந்து வரிகள் எழுதுக.

(அல்லது)

‘இனியவை கூறல்’ என்னும் திருக்குறள் அதிகாரத்திலுள்ள ஐந்து குறட்பாக்களை எழுதுக.

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.** 6

1. ________________ வயல் (சரியான விடையை எழுதுக.) (1)
2. ஆகா இந்த கிராமம் தான் எவ்வளவு அழகாக இருக்கிறது. (தேவையான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.) (1)
3. இரவும் பகலும் தூங்கிடாமல்
   இங்கும் அங்கும் நகர்ந்திடாமல்
   பெருமை யோடு காவல் காப்பார்
   பெயரில்லாத காவல் காரர்.

   (இப்பாடலில் உள்ள முதலெழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுக.) (1)
4. (சாரல், சைவம், சோகம், சீப்பு, சேவல், செம்பருத்தி, சொந்தம், சௌந்தர்யம், சந்து, சூடம், சுமை, சிறகு) - அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களை அகரவரிசைப்படுத்தி சரியான முறையில் எழுதுக. (3)